**மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2016 (2019)**

01. மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் III இல் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதன் பொருட்டு மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவினைக் கொண்ட ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது கண்டி நகரில் மாத்திரம் அல்லது விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா அல்லது மற்றும் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் அடிப்படையில் நடாத்தப்படும். எனவே பரீட்சைக்கு தோற்ற விரும்பும் நகரத்தையும் அதன் இலக்கத்தையும் விண்ணப்பப்படிவத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிடப்படல் வேண்டும்.

| <u>நகரம்</u> | <u>நகர இலக்கம்</u> |
|---|---|
| கண்டி | 01 |
| மாத்தளை | 02 |
| நுவரெலியா | 03 |

02. மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளார் சேவையில் தரம் III இன் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மத்திய மாகாணத்திலுள்ள கஷ்ட பிரதேசங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

03. (அ) நியமிக்கப்படவுள்ள எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

(ஆ) மத்திய மாகாண அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014-06-30 ஆந் திகதிய 1869/4 ஆம் இலக்க அதிவிசட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகளுக்கும் மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தத்திற்கும், இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளார் சேவையில் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

(இ) முதல் நியமனம் கிடைக்கப்பெற்ற சேவை நிலையத்தில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கும் யாதேனும் விசேட காரணங்கள் காரணமாக அக்கால எல்லை

முடிவடைவதற்கு முன்னர் யாதேனும் ஓர் அலுவலகர் இடமாற்ற வேண்டியேற்படின், அதற்கான உரிமை நியமன அதிகாரி சார்ந்ததாகும்.

(ஈ) இந் நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதி ஒன்றுக்கு உட்பட்டது. சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளார் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(உ) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கமைய சேவையில் இணைந்த திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க கருமமொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

04. **சம்பளம் :-** 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி, மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் III, II மற்றும் I ஆகிய தரங்களுக்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :

ரூபா. 28,940 - 10 x 300 – 11 x 350 - 10 x 560 - 10 x 660 - 47,990 ஆகும். (MN 2-2016) இச்சம்பளமானது 2020.01.01 ஆம் திகதி முதல் உங்களுக்கு உரித்துடையதாகும். ரூ. 31,940/- ஐக் கடந்து செல்வதற்காக தரம் II இற்கான தரமுயர்வும் ரூ. 35,790/- ஐக் கடந்து செல்வதற்காக தரம் I இற்கான தரமுயர்வும் பெறுதல் வேண்டும்.

05. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கமைய மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுலர்களுக்கான ஓய்வூதியம் தீர்மானிக்கப்படும்.

06. **தகைமைகள் : -** மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளார் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் மத்திய மாகாணத்தில் நிரந்த வதிவுடையவராக இருத்தல் வேண்டும்

(ஆ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) தண்டனைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று (2019.09.27) 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஊ) கீழ் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகளை விண்ணப்பப்படிவம் கையளிக்கப்பட வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

தகைகைளைப் பர்ரீட்சிப்பதற்காக, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படும்.

1) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

2) கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரப்) பரீட்சையில் சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த எல்லாப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு :** 04 பாடங்கள் உள்ளடங்கிய பழைய பாடத்திட்டத்தின் கீழ் 3 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

**கவனிக்கவும் :** ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும் 2019.09.27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

07. (அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மத்திய மாகாணத்திற்குறிய ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தின் சனத்தொகை எண்ணிக்கைக்கு விகிதசமமான அந்தந்த மாவட்டத்திற்கான வெற்றிட எண்ணிக்கையிலிருந்து குறிப்பிட்ட ஒரு தொகை ஒதுக்கப்படும். வெற்றிடங்கள் நிரப்படும் முறைத் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குறியதாகும்.

I. மத்திய மாகாணத்தின் ஏதேனும் ஒரு மாவட்டத்திற்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்கள் அக்குறித்த மாவட்டத்திற்கு விண்ணப்பிக்கும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளினால் நிரப்பப்பட முடியாவிடின், வெற்றிட எண்ணிக்கை மாகாணத்தின் ஏனைய 02 மாவட்டங்களின் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் மீளப் பகிரப்படும்.

II. நியமனம் செய்வதற்குள்ள மொத்த வெற்றிட எண்ணிக்கை சிறிய எண்ணிக்கையாக இருப்பின் அக்காரணத்தின் பேரில் மாவட்ட சனத்தொகை எண்ணிக்கையை அடிப்படையாக கொள்ள முடியாதவிடத்து திறமை ஒழுங்கின்படி தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவர்

III. பரீட்சையில் அவசியப்படும் ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றவர்களின் எண்ணிக்கையானது நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையிலும் பார்க்க குறைவாக காணப்படுமிடத்து மாவட்ட சனத்தொகை எண்ணிக்கை அடிப்படையின் பேரில் தெரிவுகள் செய்யப்படமாட்டாது.

(ஆ) மத்திய மாகாணத்திலுள்ள ஒரு மாவட்டத்தை சேர்ந்தவராக இருப்பதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் :

மத்திய மாகாணத்திலுள்ள ஒரு மாவட்டத்தின் வெற்றிடங்களுக்காக தெரிவு செய்யப்படுவதற்காக பின்வரும் விடயங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய இறுதித் திகதிக்கு உடன் முந்திய ஐந்து (05) வருட காலங்களில் அவர் அம்மாவட்டத்தில் குறைந்த பட்சம் (03) வருடங்களாவது தொடர்ந்து நிரந்தரமாக குடியிருப்பவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** எழுத்துமூலப் பரீட்சையிலிருந்து தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியின் வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கென நேர்முகப் பரீட்சையில் அல்லது கேட்கப்படும் எவ்வேளையிலும் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு அவர் கட்டுப்பட்டவராவர்.

(I). தொடர்ச்சியாக மூன்று (03) வருட காலப்பகுதியில் வசித்ததை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் பெயர்ப்பட்டியலிலுள்ள தகவல்களை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ்

08. நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் 3% வீதம் வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையின் கூடிய புள்ளி மட்டத்தை அடைந்து தகைமை பெறுகின்ற 3% வீதமான வலது குறைந்த நபர்கள் மட்டும் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் குறைந்த பட்சம் 50% வீதமாவது இருத்தல் வேண்டும். நியமனமொன்றுக்காக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் விசேட மருத்துவ பரிசோதனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன் தனது வலது குறைந்த நிலைமையும் சம்பந்தப்பட்ட பதவியில் கடைமையாற்றுவதற்காக அது தடையாக இராது என்பதையும் விசேட மருத்துவ அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

குறிப்பு: - விண்ணப்பதாரி வலது குறைந்த புனர்வாழ்வு நிலைமையின் கீழ் உரியவாறு விண்ணப்பிக்கின்றார் என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்பதுடன் அங்கவீனமற்ற ஆள் ஒருவர், அங்கவீனமுற்ற ஆளொருவராக குறிப்பிடக் கூடாது.

09. ***பரீட்சைத் திட்டம்***

(அ) இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| பாடம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|
| மொழியாற்றல் | 100 | 02 ½ மணித்தியாலங்கள் |
| உளச்சார்பு | 100 | 01 மணித்தியாலம் |

**மொழியாற்றல் :**

வெளிப்படுத்தல், கிரகித்தல், எழுத்துக் கோர்வை, மொழி மற்றும் கட்டுரை, கொடுக்கப்படும் தரவுகளுக்கிணங்க கடிதத்தினை வரைதல், கொடுக்கப்படும் பந்திகளைச் சுருக்கி எழுதுதல், சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல், கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல், எளிய இலக்கண விதிகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றில் பரீட்சார்த்தியின் திறனைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்களுடன் தொடர்புபட்ட பாடத்தினை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**உளச்சார்புப் :**

பரீட்சார்த்தியின் எண்கள் தொடர்பான திறன்கள், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பொது விவேகம் ஆகியவற்றைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்கள் தொடர்பான பாடங்களை இவ் வினாத்தாள் உள்ளடக்கும். இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கிய 50 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**குறிப்பு :**

(I) கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும்.

(II) சகல எழுத்துமூல விடைத்தாள்களிலும், எழுத்துப்பிழைகள் மற்றும் தெளிவற்ற கையெழுத்து ஆகியவற்றுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும்.

(ஆ) இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% வீதத்தையாவது பெறுவதுடன் பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50% வீதத்தை கட்டாயமாக பெற்றிருத்தல் வேண்டும். பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு, போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை பூர்த்தி செய்யக்கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

(இ) பரீட்சைப் பெறுபேறுகள் - விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

10. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை:-** விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிக கவனமாகவும் சரியாகவும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என அறியவருமிடத்து பரீட்சைக்கு முன்னராகவோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னராகவோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியினால் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்மையற்றவையென தெரியவருமிடத்து, அவர் உரிய காரணம் தெரிவிக்கப்படாது அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

11. **பரீட்சைக் கட்டணம்**

அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண சபை பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவு வைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெறப்படும் பற்றுச்சீட்டை (நீல நிறப் பற்றுச்சீட்டை) விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள் செலுத்தப்படமாட்டாது. காசு செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமாகும்.

12. **விண்ணப்பங்கள் :** A4 அளவிலான ஒரு தாளினைப் பயன்படுத்தி

(அ) இலக்கம் 01 தொடக்கம் 03 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும்

(ஆ) இலக்கம் 04 இலிருந்து மிகுதி வரையானவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் அவசியமாகும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் 1.1 கீழ் விண்ணப்பதாரியின் பெயரைக் குறிப்பிடும் போது முழுப்பெயரின் இறுதியிலிருக்கும் பெயரை முதலில் எழுதி பெயரிலிருக்கும் அனைத்து பெயரின் முதலெழுத்துக்களையும் பெயரின் பின்னால் குறிப்பிட வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிராத, முழுமையுறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்கள் நிராப்பாது விடுவதால் ஏற்படும் பின்விளைவுகளை விண்ணப்பதாரர்களே பொறுப்பேற்றல் வேண்டும். உரிய விண்ணப்பத்தின் நிழற்பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்குமாறு விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இல்லையேல் விண்ணப்பமானது நிராகரிக்கப்படலாம். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

**கவனிக்கவும் :** தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படுவது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட முதலெழுத்துக்களுடனான பெயரிலேயாகும். ஆகையால் மாதிரிப் படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பெயரானது சரியாக எழுதப்படல் வேண்டும். நியமனம் வழங்கப்பட்ட பின்பு பெயரில் மாற்றங்கள் செய்யவோ அல்லது புதிய பகுதிகளை சேர்க்கவோ நீக்கவோ அனுமதிக்கப்பட மாட்டாது.

12.1. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்றுவதற்குறிய தகைமைக்களைப் பூர்த்தி செய்துள்ளார் அல்லது இப்பதவிக்குறிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என

ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவையான தகைமைகளை அவர்கள் கொண்டிருக்கவில்லையெனின் அவர்களின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

12.2. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "**மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019**" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன் பதிவு மாவட்டத்திற்குறிய குறியீட்டு இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

12.3. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் **2019.09.27** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்,
மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி

13. **பரீட்சைக்குத் தோற்றுதல்**

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிக் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை குறிப்பிட்டு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். அத்துடன் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் (பக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை பெக்ஸ் மூலம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல பரீட்சார்த்திகளும் அனுமதி அட்டையில் அவர்களது கையொப்பத்தை சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவ்வாறு தோற்றும் முதல் சந்தர்ப்பத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத்தவரிய பரீட்சார்த்தி பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது அல்லது பொது நிருவாக சுற்று நிரூபம் 03/2016 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரச அல்லது

மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

14. பரீட்சார்த்திகள் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கீழ்குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:-
    (i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
    (ii) செல்லுபடியான கடவுச்சீட்டு
    (iii) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்

15. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டத்திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

16. இவ்வறிவித்தலில் வெளியாகாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குறியதாகும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களின்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுவர்.

17. இவ்வறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

18. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலுள்ள அறிவித்தலை சரியானதாகக் கருத வேண்டும்.

எம் .ஜீ. ஏ . திலகரத்ன
செயலாளர்
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2019 செப்தம்பர் மாதம் 09 ஆம் திகதி
மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.

தொலை நகல் (பெக்ஸ்) இலக்கம் – 081-2213082

(அலுவலக உபயோகத்திற்கு)

<u>மாதிரி விண்ணப்பப்படிவம்</u>

**மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2016 (2019)**

The Open Competitive Examination for the Recruitment of Grade III of Provincial Management Assistant Service of Central Province - 2016 (2019)

(கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் சரியான குறியீடுகளையும்/ இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2,
தமிழ் - 3,
ஆங்கிலம்- 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

பரீட்சைக்குத் தோற்றவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் இலக்கம்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது வர்த்தமானி அறிவித்தலின் 8.0 ஆம் பந்தியின் பிரகாரம், வலது குறைந்த புனர்வாழ்வு சலுகை நிபந்தனைகளின் கீழா? (ஆம் என குறிப்பிடப்பட வேண்டியது அங்கவீன விண்ணப்பதாரிகள் மட்டுமே ஆகும். இப்பகுதியை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 8.0 ஐ நன்கு வாசிக்கவும்)

ஆம் - 1
இல்லை - 2
( உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

01. விண்ணப்பதாரரின்

1.1 முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் : ...................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்: உதா: PERERA, A.B.C) ..........................................................................

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..........................................................................
..........................................................................................................................................

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................
..........................................................................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இல:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..........................................................................
..........................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................................................
..........................................................................................................................................

2.3 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : .............................
..........................................................................................................................................

03. 3.1 பால்
ஆண் - 0, பெண் -1 (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்

3.2 பிறந்த திகதி :- ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

3.3 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2019.09.27) வயது :
வருடங்கள் : ........... மாதங்கள் : ......... நாட்கள் : .................

3.4 தொலைப் பேசி இலக்கம்: -

கையடக்க

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

நிலையான

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

04. 4.1 நீங்கள் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் எப்போதிருந்து வசிக்கின்றீர்கள்? : ……………

4.2 உதவி அரசாங்க அதிபர் பிரிவு/ பிரதேச செயலாளர் பிரிவு : …………………………

4.3 மத்திய மாகாணத்தில் வசித்துவரும் கால எல்லை: …………………………

4.4 கிராம அலுவலர் பிரிவு : …………………………

05. கல்வித் தகைமைகள் : - பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டபெறுபேறுச் சான்றிதழின் அடிப்படையில் நிரப்புதல் வேண்டும்

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் :

[கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் /ஆங்கில மொழி மற்றும் கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்]

| பரீட்சை ஆண்டு: | | | |
|---|---|---|---|
| சுட்டிலக்கம் : | | | |
| பாடம் | தரம் | பாடம் | தரம் |
| 1. மொழி (சிங்களம் /தமிழ் /ஆங்கிலம்) | | 6. | |
| 2. கணிதம் | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க. பொ. த. (உ. த.) பரீட்சையின் விபரங்கள் :

[கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரப்) பரீட்சையில் சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த எல்லாப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்]

I. பரீட்சை ஆண்டும் மாதமும்: ……………

II. சுட்டிலக்கம் : ……………

III.பெறுபேறு

| பரீட்சை ஆண்டு: | |
|---|---|
| சுட்டிலக்கம் : | |
| பாடம் | தரம் |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. சாதாரண பொதுப்பரீட்சை | |
| 5. பொது ஆங்கிலம் | |

5.3 பரீட்சார்த்தி அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்தை பெற்றிருப்பின்-

I. பல்கலைக்கழகத்தின் பெயர் : ……………

II. பட்டம் : ……………

III. பரீட்சை நடைபெற்ற ஆண்டு : ……………

06. வேறு தகைமைகள் : …………………………………………………………...……...…………................
………………………………………………………………………………………...……....................

07. நீங்கள் எப்போதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ( உரிய கூட்டினுள் ✓அடையாளமிடவும் ) ஆம் எனின் விபரங்கள் குறிப்பிடவும்

| ஆம் | இல்லை |
|---|---|

…………………………………………………………………………………………...……….....
………..………………………………………………………………………...…………....……......

08. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் விபரம் :

i. பணம் செலுத்திய அலுவலகம் : …………………………………………………
ii. பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதி : …………………………………………………
iii. செலுத்திய தொகை : …………………………………………………

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக அமையலாம்)

09. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் மேலும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடந்துக் கொள்ளவும், இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவர் என காணப்படின் பரீட்சையின் போதோ அல்லது அதன் பின்னரோ எனது பரீட்சார்த்தி உரிமை இரத்து செய்வதற்காக எடுக்கப்படும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகின்றேன்.

……………………………………
திகதி : ……………………… பரீட்சார்த்தியின் கையொப்பம்.

10. **பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் ...................................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………
திகதி : ……………………… அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்.
அத்தாட்சிப்படுத்தியவரின் பெயர் : ……………………………………………
பதவி : ……………………………………………
முகவரி : ……………………………………………
(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)